கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

# ஆண்டு தோறும் நிகழும் மாபெரும் பொங்கல் விழா

ஆண்டு தோறும் நிகழும் பொங்கல் விழாவை தமிழ் மக்களின் தேசியக் கட்டமைப்புகளான கனடியத் தமிழர் தேசிய அவை, கனடாத் தமிழ்க் கல்லூரி, அறிவகம் ஆகியன இம்முறையும் எடுத்து வருகின்றன. நிகழ்வின் விபரங்கள் பின்வருமாறு.

***நாள்: ஞாயிறு சனவரி 18, 2015***

***நேரம்: காலை 10:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை***

***இடம்: கனடா கந்தசாமி ஆலய மண்டபம்***

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றிய மூத்த குடியான தமிழர் எங்கள் மரபுகள் தமிழர்க்கு என்று ஒரு தாயகம் இல்லாமையால் அழிந்தொழிந்து போகும் அவல நிலையில் இன்று இருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும் என்றால் தமிழர் வாழும் இடம் எங்கும் தமிழர் மரபுகள் பண்பாட்டு விழுமியங்கள் என்பனவும் தமிழ் மொழியோடு சந்ததிகளுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

தமிழகம் தமிழீழம் போன்ற தமிழர் தாயகங்களை கடந்து தமிழர் அதிகம் வாழும் நாடு கனடா. இந்த மண்ணில் தமிழின் நீட்சியும் தமிழ் மரபுகளின் பயிற்சியும் கட்டிக் காக்கப் படுவது மொழிக் கடன் மட்டுமன்றி தேசியக் கடனுமாகும்.

அந்த தார்ப்பரிய உண்மையினை உணர்ந்து கனடா வாழ் பல்வேறு அமைப்புகள் இணைந்து தமிழ் மரபு வழி பண்பாட்டு கலை நிகழ்வுகளூடாக தமிழர் புத்தாண்டான தை திங்கள் பிறப்பாம் தை பொங்கல் திருநாளை வழமை போல் வெகு சிறப்பாக அனைத்து தமிழ் மக்களையும் ஒருங்கிணைத்து நிகழ்த்தவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் பெரியோர் முதல் சிறியோர் வரை அனைத்து மக்களும் கலந்து கொண்டு தாயகத்தில் ஊர் கூடி பொங்கலிட்ட இனிய நினைவுகளை இந்த மண்ணில் கண்டு கழித்து கூடி நிகழ்த்திக் கொண்டாடி ஆடிப் பாடி மகிழும் காட்சி வழமை போல் வெகு சிறப்பாக இம்முறையும் நடை பெறவுள்ளதால் அனைத்து தமிழ் உறவுகளும் அந்நாளில் அணி திரண்டு வருக என வரவேற்கின்றோம்.

தமிழர் புத்தாண்டு நிகழ்ச்சியான இந்நிகழ்வில் மாவிலை தோரணம் கட்டி இஞ்சி மஞ்சள் கரும்பு என தாயகத்தில் முற்றத்தில் கோலமிட்டு பொங்கல் பொங்கிய காட்சிகள் தாயக நினைவுகளை முழுமையாக மீட்டு வரும் என்பதை உறவுகளுக்கு அறியத்தருகின்றோம்.

கல்லடுப்பு வைத்து புதுப்பானை வைத்து புத்தரிசியிட்டு பொங்கும் மகிழ்வை வழமை போல் பெரியோர் மட்டுமன்றி சிறுவர்களும் தனியே தமக்கு என ஒரு பானை வைத்து பொங்கி மகிழும் காட்சியில் பங்கேற்று இன்புற்று மகிழ முடியும்.

ஆடல் பாடல் கவிச்சரம் தமிழ் எழுச்சி உரைகள் என பல்வேறு தமிழ் சுவைகளை சுவைப்பதோடு தித்திக்கும் பொங்கலையும் நாவூற ஊர் கூடி பொங்கி கூடி உண்ணும் பேரின்பமும் காண்கின்ற தாயக தமிழ் மரபு இன்பத்தை இந்நிகழ்வில் எம் உறவுகள் வழமை போல் நிறைவாக பெறுவார்கள்.

இவற்றோடு இவ்வாண்டு சிறப்பாக ஆழக் கடல் எங்கும் தமிழ் கொண்டு ஆண்ட எங்கள் தமிழ் மன்னன் இராஜ இராஜ சோழனின் 1000 ஆவது நினைவாண்டு என்ற வகையில் மாவீரன் இராஜ இராஜ சோழன் பற்றிய விவரண சித்திரம் ஒலிக்கும் 5 நிமிட சிறப்பு காணொளியும் காண்பிக்கப் படவுள்ளது.

எந்த மண்ணில் வாழ்ந்தாலும் தமிழர்கள் நாம் தமிழர்களே. இந்த மண்ணில் வாழ்ந்தாலும் நாம் தமிழ் மரபு தொலைக்காத தமிழர்களாக இனி வரும் காலத்திலும் வாழ வேண்டும் என்றால் தமிழர்கள் நாம் எம் அடுத்த சந்ததிக்கு தமிழர் எங்கள்

*மரபுகளை சுவை குன்றாமல் கற்றுக் கொடுக்க வேண்டும். அழியாத் தமிழ் செல்வதோடு எம் சந்ததிகள் தமிழ் போன்றும் தமிழராக வாழ்வது இன்றைய தமிழ் பெற்றோர் கையிலேயே உள்ளது.*

*தாயகத்தில் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதை எம் எதிர்கால தமிழ் சந்ததியினருக்கு உணர்வு பூர்வமாகவும் நிகழ்வுகளூடாகவும் எடுத்துச் சொல்லும் பொழுது மட்டுமே அவர்கள் இனமான உணர்வு கொண்ட தமிழர்களாக வாழ்வார்கள்இ வளர்வார்கள்.*

*நாளைய தமிழர்களும் தமிழ் பேசும் தமிழராக தமிழர் மரபுகளை கட்டிக் காக்கும் இனமான தமிழர்களாக வாழ்வதற்கே இந்த தமிழ் மரபு திங்களின் பொங்கல் விழா நிகழ்வு.*

*அனைத்து உறவுகளையும் வருக வருக என அன்போடு வரவேற்கின்றோம்.*

*வீழ்வது நாமானாலும் வாழ வேண்டும் எம் தமிழ்!*

***கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)***

**தொலைபேசி: 416-830-7703 | மின்னஞ்சல்: info@ncctcanada.ca**

**முகநூல்: facebook.com/canadianncct**